Registered as a NewsPaper
விலை ரூபா 7.00
# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
பக்கங்கள் - 08
நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2035 தை -19 02-02-2004 திங்கட்கிழமை ஓசை-349

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள் படம் பிறேம்செய்தல்
அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம்,
யாழ் சாலை, கிளிநொச்சி. (சி-9004)
R.V பந்தல் சேவை, தர்மபுரம்.

## சங்கீதப் போட்டியில் அகில இல. ரீதியில் முதலிடம் பெற்ற மாணவிக்குத் தேசியத்தலைவரின் பாராட்டும் பரிசில்களும்



அகில இலங்கை ரீதியில் சங்கீதப்போட்டியில் முதலிடம் பெற்ற மாணவிக்கு தேசியத்தலைவர் அவர்களின் கையொப்பம் பொறிக்கப்பட்ட சான்றிதழையும் பரிசிலையும் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் தங்கன் வழங்குகிறார்.

(அலுவலக நிருபர்)

முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு நேற்றுசிறப்புற நடை பெற்றது இவ்விழாவில்,

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சங்கீத போட்டிப் பரீட்சையில் முதலாமிடத்தைப் பெற்ற முள்ளியவளைநுண்கலைக் கல்லூரி மாணவி செல்வி மகேந்திரம் மயிலாசினி அவர்களுக்குதமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின்கையெழுத்து பொறிக்கப்பட்ட சான்றிதழ் பணப்பரிசு என்பவற்றை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார்.

நேற்றுப் பிற்பகல் 5.00 மணிக்கு வித்தியானந்தாக்கல்லூரி அரங்க மண்டபத்தில் ஆரம்பமான இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியை தமிழீழ அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றி வைத்தார். மங்கல விளக்கினை சங்கீத பூசனமும் நுண்கலைக் கல்லூரி சங்கீத ஆசிரியருமான பாலசிங்கம், நுண்கலைக் கல்லூரி தபேலா ஆசிரியரும் தபேலாவாத்தியக் கலை ஞருமான கணபதிப்பிள்ளை ஆகி யோர் ஏற்றிவைத்தனர்.

அடுத்து மாவீரர் வணக்க நடனம் இடம்பெற்றது. இதனைத்தொடர்ந்து தற்காப்புக்கலை ஆசிரியர் ரத்ன சோதி ஆசிரியர் அவர்களின் வழி நடத்தலில் கராத்தே கலையின் பல்வேறு காட்டாக்கள் அரங்கில் வைத்துக் காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து இசை அரங்கம், கவிதை, வாய்ப்பாட்டு என்பன கல்லூரி மாணவிகளால் இசைக்கப்பட்டது.

இவற்றைத் தொடர்ந்து முள்ளியவளைநுண்கலைக்கல்லூரி மாணவியான செல்வி மகேந்திரம் மயிலாசினிக்கு அகிலஇலங்கைரீதியில் நடத்தப்பட்ட சங்கீதப் போட்டியில் முதலிடம் பெற்றமையை வாழ்த்தி தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் கையெழுத்து பொறிக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் பணப்பரிசு என்பனவற்றை தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வழங்கி கௌரவித்தார். இதனைத் தொடர்ந்து கல்லூரியின் ஐந்தாம், ஆண்டு நிறைவு தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கும் கல்லூரி ஆசிரியர்கள், பணியாளர்கள், மேற்படி கல்லூரியில் கற்று சாதனைவீரர்களாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் பரிசில்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கிக் கௌரவிக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே - ரொம்சோ நகர அரசியற் தலைமையுடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் பேச்சு!

## ரொம்சோ நகருடன் யாழ். நகரை நட்பு நகரமாக்குவது குறித்து இரு தரப்புமிடையில் பிராஸ்தாபம்

**நோர்வே ரொம்சோ நகரின் அரசியல் தலைமைத்துவத்தை நேற்று முன்தினம் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் சந்தித்துப் பேசியுள்ளார். சோசலிஷ்ற் இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களில் ஒருவரான ஜேன்ஸ் ரொவோல்டை சந்தித்த சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் ரொம்சோ நகருடன் இலங்கைத் தமிழர்களின் மிகப்பெரிய நகரமான யாழ்ப்பாணத்தின் நட்புறவு நகரமாக்குவதற்குரிய சாத்தியம் குறித்து ஆராய்ந்தனர் என ரொம்சோ செய்தித்தாள் தெரிவித்துள்ளது.**

இச் சந்திப்புக் குறித்து கருத்துத் தெரிவித்தரொவோல்ட்,"இது ஆர்வத்துக்குரிய விடயம். நாம் அபிவிருத்தி உதவி அமைச்சர் ஹைடில் பிராவ்ஜேட் ஜோன்சனிடமிருந்து பெற்ற சமிக்கைகள் மூலம் இது சாத்தியமானதே'எனத்தெரிவித்த ரொவோல்ட் ஆரகைட் உள்ளூராட்சி சபை இவ்வாறு என்னொரு நட்புறவு நகரத்துக்கு உதவுவது சாத்தியமில்லை. தமிழ் மக்களுக்கு நண்பர்கள் தேவை என்றார்.

சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் கருத்துக் கூறுகையில், நாங்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முன்னெடுப்பை கையேற்பது குறித்து சனாதிபதி திட்டமெதையும் கொண்டிருக்கவில்லை

### புலிகளுக்கு பாதுகாப்பு செயலரே கடிதம் எழுதினாராம்

(கொழும்பு)

சனாதிபதி சமாதான முன்னெடுப்பைக் கையேற்பது தொடர்பில் இன்னமும் திட்டம் எதனையும் கொண்டிருக்கவில்லை என சனாதிபதியின் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் போர்நிறுத்த உடன்பாடு தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கடிதம் எழுதியதாக குறிப்பிட்டுள்ள அவர் அது செயலாளர் மட்டத்தில் இடம்பெற்ற நகர்வு மாத்திரமே எனக் குறிப்பிட்டுள்ளார். போர் நிறுத்த உடன்பாட்டு விடயமாகவே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கடிதம் அனுப்பினார். எனினும் அது அரசியல் நிலைப்பாட்டுக் கடிதம் அல்ல எனவும் ஹரிம்பீரிஸ் விளக்கம் அளித்துள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் குழுவைக் கூட்டணி நேற்று நியமித்தது

### செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணி செயற்குழு நேற்றுக் கூடி தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக ஏழு பேர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளது.

இதன் தலைவராக வீ. ஆனந்தசங்கரி நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் பொதுச் செயலாளர் சம்பந்தன்,சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம்,இணைப் பொருளாளர்கள் வவுனியா, அம்பாறை மாவட்ட உறுப்பினர்கள் இருவர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பனையுடன் மோ.சைக்கிள் மோதியது: பயணம் செய்தவர் மரணம்!

### முரசுமோட்டையில் சம்பவம்

(அலுவலக செய்தியாளர்)

முரசுமோட்டைசெல்லையா கடைச் சந்திப்பகுதியில் வீதி ஓரமாக இருந்த பனையுடன் மோட்டார் சைக்கிள் மோதியதால் அதில் பயணித்தவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

நேற்று மாலை 4.30மணி அளவில் பரந்தன் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த சுப்பர்கப் ரக மோட்டார் சைக்கிள் வீதிவளைவில் வீதிக்கு மிகவும் அண்மையாக உள்ள பனைமரத்துடன் மோதியது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த ஐயம்பிள்ளை-யோகராஜா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று அரச விடுமுறை தினம்

ஹஜ் பெருநாளை முன்னிட்டு இன்றைய தினம் அரசாங்க மற்றும் வங்கி விடுமுறை நாளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான அறிவித்தலை உள்ளூராட்சி மற்றும் மாகாண

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகத்தில் சிறிலங்கா சுதந்திரதினத்தை கறுப்பு நாளாக அனுஷ்டிக்க கோரிக்கை

### பல பொது அமைப்புக்கள் தமிழ் மக்களுக்கு விடுப்பு

சிறிலங்காவின் சுதந்திரதினமான பெப்ரவரி 4ஆம் திகதியை தமிழர் தாயகப்பகுதியில் துக்கதினமாகவும் ஒருகறுப்புநாளாகவும் அனுஷ்டிக்குமாறு பல்வேறு பொது அமைப்புக்களும் அறைகூவல் விடுத்துள்ளன.

குறிப்பாக வடக்கில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சம்மேளனம், கிளிநொச்சி வர்த்தக சங்கம், வவுனியா வடக்கு வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் என்பன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

யாழ். மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் அன்றைய தினம் வர்த்தக நிலையங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பாடசாலைகள் என்பனவற்றை மூடி துக்கம் அனுஷ்டிக்குமாறு கேட்கப்பட்டுள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

2ஆம் லெப். யாழின்பன்

(முத்தையா புஸ்பராசா, உரும்பிராய் தெற்கு, அராலி யாழ்.) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# தமிழீழத்தின் இருப்பை சர்வதேசம் ஏற்றுள்ளது வலுமிக்க தேசிய இனமாக திகழ்கின்றோம்

## -தேசிய விளையாட்டுவிழா ஆலோசனை கூட்டத்தில் பாப்பா

தமிழீழத்தின் இருப்பை இன்று சா்வதேசமே ஏற்றுக்கொண்டுள்ளது. அரசியல் ரீதியாக வலுமிக்க ஒரு தேசிய இனமாக நாம் ஏற்றுக்கொள் ளப்பட்டிருக்கிறோம் எமது மக்களின் தேவைகளை நிறைவு செய்வதில் நாம் அனைவருமே ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளா் கி.பாப்பா 3வது தமிழீழ தேசிய விளையாட்டு விழா தொடா்பான ஆலோசனைக் கூட்டத்தில் தெரி வித்தாா்.

தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் அ.இன்பன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வடகிழக்கு விளையாட் டுத்திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளா் விமலராஜன் உட்பட எட்டு மாவட்டங்களின் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தா் கள்,மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளா்கள் மற்றும் விளை யாட்டுத் துறை சாா்ந்த நிபுணா்கள் எனப்பலரும் கலந்து கொண்ட இக்கூட்டம் தூயவன் அரசறிவியற் கல்லூரி நூலக கேட்போா்கூடத்தில் கடந்த 29ஆம், திகதி நடைபெற்றது.

கடந்த இரு வருடங்களில் கேணல் சங்கா் நினைவாக துடுப்பாட்டப் போட்டியும், லெப்.கேணல் விக்டா் நினைவாக உதைபந்தாட்டப் போட் டியும் மேஜா் அல்பேட் நினைவாக ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியும் மேஜா் சோதியா நினைவாக வலைப்பந்தாட்டப் போட் டியும் நடாத்தப்பட் டது.இவற்றுடன் இவ்வருடத்தில் இருந்து மேலதிக மாக ஐந்து போட்டிகள் நடாத்தப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

லெப். சதா நினைவாக பெண்க ளுக்கான கரப்பந்தாட்டப் போட்டி யும், லெப். கேணல் புலேந்தி அம் மான் நினைவாக ஆண்களுக்கான கிளித்தட்டும், கப்டன் அன்பரசி நினைவாக பெண்களுக்கான கிளித் தட்டுப் போட்டியும், லெப். கேணல் சந்திரன் நினைவாக ஆண்களுக் கான கபடிப்போட்டியும், மேஜா் திலகா நினைவாக பெண்களுக்கான கபடிப்போட்டியும் மேலதிகமாக நடைபெறவுள்ளது.

எதிா்வரும் 20 ஆம் திகதி தொடக் கம் தொடா்ச்சியாக ஏழு நாட்கள் இரவு,பகல் போட்டியாக நடைபெற வுள்ளது. உதைபந்தாட்டம் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு முத லில் குழுக்களிடையே லீக் முறை யில் போட்டிகள் இடம்பெறவுள்ளது. (ஏ) குழுவில் கிளிநொச்சி, அம் பாறை,வவுனியா,மன்னாா், ஆகிய மாவட்ட தெரிவு அணிகளும், (பி) குழுவில் யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு, திருகோணமலை,முல்லைத்தீவு, ஆகிய மாவட்டதெரிவு அணிகளும் இடம்பெறவுள்ளன. உதைபந்தாட்டம் தவிா்ந்த ஏனைய போட்டிகள் லீக முறையில் நடாத்தப்படவுள்ளன.

மாவட்ட தெரிவு அணிகளை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளா்கள், மாவட்டவிளை யாட்டு உத்தியோகத்தா்கள்,குறித்த விளையாட்டு சங்கங்களின் பிரதி நிதிகள் ஆகியோருடன் இணைந்த குழு தெரிவு செய்யும் என தெரிவிக் கப்பட்டது. (சோ)

# மிதிவெடி அச்சுறுத்தலினால் மீளக்குடியமா்வு தாமதம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கின் படையி னரின் ஆக்கிரமிப்பிலுள்ள பகுதியில் மக்கள் மீளக் குடியமா்வதற்கு மிதி வெடிகள் அபாயம்பெரும்தடையாகக் காணப்படுவதாக வடமராட்சி புனா் வாழ்வு நிறுவனம் சுட்டிக்காட்டுகிறது.

மேற்படி பகுதிகளில் ஏராளமான நிலப்பரப்பு படையினரால் கைவிடப் பட்டுக் காணப்படுகின்றது. ஆனால், அப்பகுதிகளில் படையினா் புதைத்து வைத்துள்ள மிதிவெடி மற்றும் பொறிவெடிகள் என்பன மக்களின் மீள்குடியமா்வுக்கு பெரும் அச் சுறுத்தலாக அமைந்து காணப்படு கின்றது.

இதனால், அப்பகுதிகளில் மக் கள் மீளக்குடியமர முடியாத சூழ் நிலை காணப்படுவதால் அப்பகுதி மக்களுக்கான புனா்வாழ்வு நடவடிக் கைகளை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படுகிறது.

இதேவேளை, மேற்படி பகுதி களில் மிதிவெடி அகற்றும் நட வடிக்கைகளுக்குப் படையினா் தமது பாதுகாப்பைக் காரணம் காட்டி தடை விதித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றமையும் குறிப் பிடத்தக்கது. (33)

# முரசு மோட்டை கிராமத்தில் தேசிய எழுச்சிப் பேரவை தெரிவு

(கண்டாவளை)

முரசுமோட்டை கிராமத்தில் தேசிய எழுச்சிப்பேரவை தெரிவுப் பொதுக் கூட்டம் கடந்த வெள்ளி பி.ப.3.00 மணிக்கு முருகன் ஆலய முன்றலில் கிராம அபிவிருத்திச் சங் கத்தலைவா் சி.சிதம்பரநாதன் தலை மையில் ஆரம்பமானது.

தேசிய எழுச்சிப் பேரவையின் புதிய செயலாளராக சோ.லோகேந் திரன்,பொருளாளராகசாந்த கோபால் ஆகியோா் தெரிவு செய்யப் பட்ட துடன் மேலும் 15 நிா்வாக உறுப்பி னா்கள் தெரிவு செய்யப் பட்டனா். இந்நிகழ்வில் பரந்தன் பிரதேச அரசி யல்துறைப் பொறுப்பாளா் செ.சுதா கலந்து கொண்டு சமகால அரசியல் நிலவரம் தொடா்பாக கருத்துரை வழங்கினாா்.வேலைத்திட்டம் தொடா் பாக பரந்தன் கோட்டப் பொறுப்பாளா் பரந்தாமன் கருத்துரை வழங்கினாா். (14)

# தருமபுரம் மருத்துவமனையில் வைத்தியர்கள் பற்றாக்குறை

(கண்டாவளை)

தருமபுரம் வைத்தியசாலையில் வைத்தியா் பற்றாக்குறையால் நோயாளா்கள் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனா். இவ் வைத்திய சாலை 1960 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மத்திய மருந்தகமும் மகப்பேற்று விடுதியும் கட்டி ஆரம்பமான போது ஒரு வைத்தியா் நியமிக்கப் பட்டிருந்தாா். தற்போது இப் பிரதேசத்தில் மக்கள் குடிப் பரம்பல் பல்கிப் பெருகி வருவதால் அதிகரித்த நோயாளா் நலன் கருதி மேலும், பெண்கள் பொது விடுதி, ஆண்கள் விடுதி என இரண்டு விடு திகள் மேலதிகமாக மனித நேய அமைப்புக்களின் உதவியுடன் கட் டப்பட்டு நோயாளா் தங்க வைக்கப் பட்டு சிகிச்சை யளிக்கப்பட்டு வருவ துடன் வெளி நோயாளா் பகுதிக்கும் பெருமளவு நோயாளா்கள் சிகிச் சைக்காக தினமும் வருகின்றனா். இதனால் இங்கு கடமை புரியும் ஒரே ஒரு வைத்தியா் மட்டும் வெளி நோயாளா் பகுதி, மகப்பேற்று விடுதி ,ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி ஆகியவற்றிலுள்ள அனைத்து நோயாளா்களையும் சிகிச்சைய ளித்து வருவதுடன் தொடா்ந்து பகல் இரவு என்று கடமையாற்றி வருகிறாா். இதன் காரணமாக பெரு மளவு நோயாளா்களுக்கு சிகிச்சை யளிக்க முடியாது திணறுவதையும் அவதானிக்க முடிகிறது. தற்போது உள்ள நிலையில் இவ் வைத்தி யசாலை சுற்றயல்கூறு மருத்துவ மனையாக தரம் உயா்த்திமேலதிக வைத்தியா்களை நியமிக்காது அரசு பாராமுகமாக இருந்துவருவதாக தெரியவருகின்றது. (14)

# 3ஆம் இடம்பெற்றாா்

கிளி.புனித அந்தோனியாா் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் தரம் 11ல் கல்விகற்று மாகாணமட்ட சமூகக்கல்விப்போட்டியில் தோற்றி செல்வன் விஜயகுமாா் விஜயதா்சன் மாகாண மட்டத்தில் மூன்றாம் இடம் பெற்றுள்ளாா். இப்பாடசாலை இரா ணுவ நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்டு இடம்பெயா்ந்து மீண் டும் சொந்த இடத்தில் இரு வருடங் களாக மட்டும் இயங்கிவரு வது குறிப்பிடத்தக்கது. (14)

# யாழ்.மாவட்டத்தில் கல்விகற்கும் வயதிலுள்ளோரில் 10 வீதமானோர் பாடசாலை செல்வதில்லை

## கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வாழும் கற் கும் வயதுடைய சிறாா்களில் 10 வீதமானோா் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை என கல்வித் திணைக்கள வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.குடாநாட்டில் நீண்டகாலமாக நிலவிவரும் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாலும் வன்செயல் களாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஏராளமானவை வாழ்ந்து வருகின் றன. இப்பாதிப்புக்களால் ஏற்பட் டுள்ள வறுமை நிலையும் ராணுவ நெருக்கடிகளால் கல்வியைத் தொட ரக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்படா மையும் அரசின் புதிய கல்வித் திட்டத்தின் மூலம் ஏற்பட்டுள்ள அதிக செலவினங்களுமே இவ்வா றான சிறாா்கள் தம் கல்வியை தொடராமைக்குரிய காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு இவ்வாறான சூழ் நிலைகளால் தம் கல்வியை இழந்துள்ள மாணவா் களை இனம்கண்டு அவா்களுக்குப் புனா்வாழ்வு வழங்கும் அல்லது கல் வியை தொடருவதற்குரிய வசதி களை வழங்கும் நடவடிக்கைகளை தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை யினா் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (33)

# வேலணை துறையூர்ப் பகுதியில் படைமுகாம் பலப்படுத்தல்

வேலணை துறை யூரில்உள்ள படை முகாமினைப் பலப்படுத்தும் முயற்சியில் படையினா் ஈடுபட்டு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களாக நடை பெற்றுவரும் இப் பலப்படுத்தல் பணி யில் ஏராளமான படையினா் ஈடுபட்டு வருகின்றனா். இதன்போது மேற்படி முகாமின் முன்னரங்க நிலைகள் மண் மூடைகள், மரக்குற்றிகள் கொண்டு புனரமைக்கப்பட்டு வருவ துடன் புதிதாக முட்கம்பி வேலிக ளும் அமைக்கப்பட்டு அதில் மின் பாய விடப்பட்டுள்ளதுடன் மண் அணைகளை விஸ்தரித்து பலப் படுத்தும் நடவடிக்கைகளிலும் படை யினா் தீவிரமாக செயற்பட்டு வரு கின்றனா்.

இதேவேளை மேற்படி முகாமிற்கு ஒருதொகுதி புதிய துருப்புக்கள் கடமைக்காகவும் அழைக்கப்பட் டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்ற மையும் குறிப்பிடத்தக்கது. (33)

# மானிப்பாயில் ஈ.பி.டி.பி.யினா் மக்கள் மீது அடாவடி

யாழ்.மானிப்பாய்ப் பகுதியில் நிலை கொண்டுள்ள ஈ.பி.டி.பி.யினா் மக்கள் மீது அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருவதாக விசனம் தெரி விக்கப்படுகிறது.

மானிப்பாயில் உள்ள மருதடியில் முகாம் ஒன்றில் தங்கியுள்ள இவா் கள் வீதியால் செல்வோரிடத்தே சில துண்டுப்பிரசுரங்களைப் திணித்துத் வருகின்றனா். அவற்றை நிராகரிக்க முயல்வோரை விரட்டியும் எச்சரித் தும் வருவதுடன் மாலைவேளை களில்அவ்வீதியால்செல்லும் யுவதிக ளைக் கிண்டல் செய்தும் கேலி செய்தும் வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.படையினரின் அனுசரணை யுடன் இவா்கள் மேற்கொள்ளும் இவ்அடாவடித்தனங்கள் குறித்து விசனம் தெரிவிக்கும் மக்கள் இது குறித்து அப்பகுதிகளில் கடமையாற் றும் சிறிலங்காப்பொலிசாா் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வில்லை என்பதை மக்கள் சுட் டிக்காட்டுகின்றனா். (33)

# தென் மாகாணத்தில் தனித்துப் போட்டி

எதிா்வரும் தென்மாகாண சபைத் தோ்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் காலி மாவட்டத்தில் தனித்துப் போட்டியிடவுள்ளது.

காலிமாவட்டத்தில் 25 வேட்பா ளா்களை தோ்தல் களத்தில் நிறுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக மாநகர சபை உறுப்பி னா் ஹஸன் ஷரீப் கூறியுள்ளாா்.


# 5ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் அணைப்பில் 15 12 1978



ஆண்டவன் அழைப்பில் 02 02 1999

## செல்வி கலைச்செல்வி பரராசசிங்கம்

(மகாறம்பைக்குளம் - வவுனியா A.P.R)

ஆண்டுகள் ஐந்தான போதும் தணியாத
பிரிவெம்மை வாட்டும் மனத்திற்குள்
மலரான உந்தன் இனிய நினைவென்னும்
சுகந்தத்தில் எம் வாழ்க்கை செல்லும்.

தகவல்:-
செல்வம் உதிரிகள்
வாணிபம்,
A.P.R.
நெடுங்கேணி.

உன் நினைவில் வாடும்
அப்பா,அம்மா,சகோதரா்கள்,
அம்மம்மா, மாமாமாா்,மாமிமாா்,
பெரியப்பாமாா், பெரியம்மாமாா்,
சித்தப்பா, சித்திமாா்.

(4196)



# திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீா்!

நிகழும் சுபானு வருடம் தைமாதம் 19ம் நாள் (02.02.2004) திங்கட்கிழமை முற்பகல் 10.18 தொடக்கம் 11.30 மணி வரையுள்ள மீனலக்கின சுப முகூா்த்தத்தில் எமது கிளை நிறுவனமான



## திருக்குமரன் அழகுமாடம்

என்னும் வணிக நிலையத்தை
முல்லைத்தீவு சாலை
புதுக்குடியிருப்பில் திறந்து வியாபாரத்தை
ஆரம்பிக்கவுள்ளோம்.
இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு
அன்பா்கள், நண்பா்கள், ஆதரவாளா்கள்,
வாடிக்கையாளா்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

தங்கள் நல்வரவை நாடும்,
உரிமையாளா் பி. ஆறுமுகம்
திருக்குமரன்
புடவை மாளிகை(றெலிகோனா்)
புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு.

7ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(கி-7145)




பாதுகாப்புக் காரணங்களுக்காக அமெரிக்காவுக்கான விமான சேவை இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் பிரிட்டனின் ஹீத்ரோ விமான நிலையத்தில் தரித்து நிற்கும் பிரிட்டன் விமானங்கள்.

# வடகொரிய அணுவாயுத பிரச்சினையைத் தீர்க்க மாத இறுதியில் ஆறு நாடுகள் கூடும்

## அமெரிக்க வெளிவிவகார அமைச்சு நம்பிக்கை

**வடகொரிய அணுவாயுதப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் ஆறு நாடுகள் பங்குபற்றும் பேச்சுவார்த்தைகள் இம்மாத இறுதியளவில் நடைபெறுமென அமெரிக்க துணைவெளிவிவகார அமைச்சர் ஜேம்ஸ்ஹெலி தெரிவித்துள்ளார்.**

தென்கொரியாவின் சோல நகருக்கு நேற்றுக்காலை போய்ச் சேர்ந்த அவர், அமெரிக்கா, சீனா, வடகொரியா, ஜப்பான், ரஷ்யா, தென்கொரியா ஆகிய நாடுகள் பங்குபற்றும் பேச்சுவார்த்தைகள் இயன்றவரை விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும் என்று தெரிவித்தார்.

சோல் நகரில் சர்வதேச விமான நிலையத்தில் நிருபர்களிடம் பேசிய அவர், மற்றுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை சம்பந்தப்பட்ட ஆறு நாடுகளும் விரைவில் ஆரம்பிக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்று சீனாவும் ரஷ்யாவும் விருப்பம் தெரிவித்துள்ளன.

அணுவாயுத விவகாரத்துக்கு தீர்வு காணும் வகையில் முதல் நடவடிக்கையாக சகலவித அணுவாயுத நடவடிக்கைகளும் நிறுத்தப்படும் என்ற வகையில் வடகொரியா சென்ற மாதம் அறிவித்தல் ஒன்றை விடுத்திருந்தது.

சோல் நகரில் நேற்று அமைச்சர்களையும் அதிகாரிகளையும் சந்திக்கும் ஜேம்ஸ்ஹெலி இன்று டோக்கியோ செல்லவுள்ளார்.



காட்டு யானைகளின் அட்டகாசங்களைக் குறைக்கும் நோக்கிலும் மக்களை விழிப்புறச் செய்யவும் அசாமில் நடைபெற்ற விழாவொன்றில் யானைகள் கால் பந்தாட்டத்தில் ஈடுபடுகின்றன.

# அல்-ஹ தா, தலிபான் இயக்கங்கள் தடை ஐ.நா. பாதுகாப்புப் பேரவை தீர்மானம்

சர்வதேச தீவிரவாத இயக்கங்களான அல்-ஹைதாமற்றும் தலிபான் இயக்கங்களுக்குத் தடை விதிக்குமாறு நூற்றிற்கும் மேற்பட்ட உறுப்பு நாடுகளை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவை கேட்டுள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையின் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அக் கூட்டத்தில் பயங்கரவாதத்தை ஒடுக்கபல்வேறு நடவடிக்கைகளை வலியுறுத்தும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ் இயக்கங்களின் வங்கிச் சொத்துக்களை முடக்கவேண்டும் எனவும்,

இவ் இயக்கங்களிற்குப் பாதுகாப்பு அளிக்கும் மற்றும் இவ் இயக்கங்களுக்குப் புகலிடம் அளிக்கும் நாடுகளுக்கு எதிராக ஆயுதக்கட்டுப்பாடு விதித்தல் ஆகியனவும் இத் தீர்மானத்தில் முக்கிய அம்சங்கள் என ஐக்கிய நாடுகள் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தீர்மானத்தை நடைமுறைப் படுத்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை காலக்கெடு விதிக்கப் பட்டுள்ளது.

இக்காலக்கெடுவிற்குப் பின்னரும் இவ்வமைப்புக்களுக்குத் தடை விதிக்காத உறுப்பு நாடுகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபையில் பாதுகாப்புப் பேரவை ஒப்புகொண்டுள்ளது.

# மத அடையாளங்களை வெளிப்படுத்தும் தடைக்கு பிரான்ஸில் எதிர்ப்பு வலுவடைகின்றது!

## - சீக்கியர்கள் தலைநகரில் ஆர்ப்பாட்டம்

(பாரிஸ்)

பிரான்சில் மதஅடையாளங்களைப் பொதுஇடங்களில் வெளிப்படுத்த அந்நாட்டின் அரசு விதித்துள்ள தடையை எதிர்த்து தலைநகர் பாரிசில் சீக்கியர்கள் நேற்று முன்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் செயதுள்ளனர்.

ஐரோப்பிய நாடான பிரான்சில் மதச் சார்பற்ற நடைமுறைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில் புதிய சட்டம் ஒன்றினை அரசு கொண்டுவந்துள்ளது.

கல்விக்கூடங்கள் போன்ற இடங்களில்கூட மத அடையாளங்களை வெளிப்படுத்த இந்தப் புதிய சட்டம் தடை விதித்துள்ளது.

அதன்படி பர்தா அணிவதைக் கூட தடை செய்யும் இச்சட்டத்தை எதிர்த்து ஏற்கனவே இஸ்லாமிய சமூகத்தினர் தொடர்ந்து போராட்டங்களை நடத்திவரும் நிலையில்,

தலைநகர் பாரிசில் மாபெரும் கண்டனப்பேரணி நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது. இதில் ஜேர்மனி, அமெரிக்கா, இத்தாலி, பெல்ஜியம் உள்ளிட்ட நாடுகளில் வசிக்கும் சீக்கியர்களும் கலந்து கொண்டனர்.

# பாக்தாத்திலுள்ள கொலண்ட் தூதரகம் மீது தாக்குதல்!

## கட்டடத்தின் ஒரு பகுதி அழிந்தது

பாக்தாத்திலுள்ள கொலண்ட தூதரகத்தின் மீது நேற்று றொக்கற் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளது இந்த றொ ற் தாக்குதலினால் தூதரகத் ன் ஒரு பகுதி தீக்கிரையாகி உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன ஈராக்கில் அமெரிக்கப் படையினருடன் ஆயிரம் கொலண்ட் படையினர் இணைந்து செயற்படுவது குறிப்பிடத்தக்கது

# பயணிகள் படகில் தீவிபத்து 200 பேரைக் காணவில்லை!

## -கொங்கோவில் அனர்த்தம்

கொங்கோ சனநாயகக் குடியரசில் ஆற்றுப்பகுதியில் சென்று கொண்டிருந்த படகொன்று தீப்பிடித்ததில் அதில் பயணம் செய்த இருநூறு பேர் நீரில் மூழ்கி மரணமடைந்திருக்கலாமென அஞ்சப் படுகின்றது.

தீ விபத்துக்குள்ளான இந்தப்படகில் சுமார் ஐந்நூறுபேர் பயணம் செய்துள்ளனர். இவர்களுள் இருநூற்றி ஒருவர் காப்பாற்றப்பட்டுள்ளனர். படகின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறை பழுதுபார்த்துக் கொண்டிருந்தபோது தற்செயலாக ஏற்பட்ட தீயினால் அதில் வைக்கப்பட்டிருந்த எண்ணெய்த் தாங்கிகள் தீப்பிடித்துக் கொண்டன.


இதனால் படகில் இருந்து கடலினுள்குதித்தவர்களில் இருநூறு பேர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர் இவர்கள் நீரில் மூழ்கி மரணமடைந்திருக்கலாம் என அஞ்சப் படுகின்றது.

# அமெரிக்கா ஆக்கிரமித்தால் போராடி உயிர் துறப்பேன்

## -பிடல் கஸ்ரோ அறிவிப்பு

அமெரிக்கா கியூபாவை ஆக்கிரமித்து கம்யூனிஸ்ட்அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு முயற்சித்தால் துப்பாக்கியுடன் போராடி வீரமரணம் அடையப்போவதாக கியூபா சனாதிபதி பிடல்கஸ்ரோ தெரிவித்துள்ளார்.

வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் 77 வயதான இவர் தனது மரணம் எவ்வாறு சம்பவிக்கும் என்பது பற்றி தனக்குக்கவலையில்லை எனவும் அமெரிக்கா கியூபாவை ஆக்கிரமித்தால் அதனை எதிர்த்துப் போராடி உயிர்துறக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.



இஸ்லாமியரின் புனித ஹஜ் யாத்திரையின் ஒரு கட்டமாக அரேபியாவிலுள்ள அரபாத் மலையின் ஜபால் அல்ரமா நோக்கி யாத்திரை மேற்கொள்ளும் யாத்திரிகர்.

# அமெரிக்க பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பாக்தாத்திற்கு அந்தரங்கப் பயணம்

அமெரிக்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பாக்தாத்திற்கான விஜயம் ஒன்றை இன்று ஆரம்பித்துள்ளார்.

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்டிருந்த யுத்தம் கடந்த ஏப்ரல் மாதத்தில் முடிவடைந்ததை அடுத்து அமெரிக்க பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பாக்தாத்திற்கு மேற்கொள்ளும் மூன்றாவது விஜயம் இதுவாகும்.

இவர் ஜேர்மனியில் இருந்து பாக்தாத்திற்கு செல்லும் பயணம் மிகவும் அந்தரங்கமாக வைக்கப் பட்டிருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜேர்மனியில் அவர் தங்கி இருந்த சமயம் ஈராக்கில் கடமையாற்ற இருக்கும் அமெரிக்க வீரர்களைச் சந்தித்து உரையாடினார்,

இந்த வீரர்கள் பாக்தாத் போய்ச சேர்ந்ததும் இதே எண்ணிக்கையான படையினர் பாக்தாத்தில் இருந்து அமெரிக்காவிற்குச் செல்ல உள்ளனர்.

அமெரிக்க பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் போல் வோல்கோவிற் சென்ற ஒக்ரோபர் மாதம் ஈராக்கிற்கான தனது இரண்டாவது விஜயத்தை மேற்கொண்ட சமயம் பாக்தாத்தில் அவர் தங்கியிருந்த ஹொட்டேல் மீது சதாம் ஆதரவாளர்க்வ் ஏவுகணைத்தாக்குதல் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இத்தாக்குதலினால் ஒரு அமெரிக்க வீரர் கொல்லப்பட்டதுடன் ஐந்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர்.

# லெபனானில் வைப்பிலிட்ட பணம் ஈராக் திரும்புகிறது

அமெரிக்கா ஈராக்மீது யுத்தம் தொடுப்பதற்கு முன்னர் ஈராக் லெபனான் வங்கியில் வைப்புச் செய்திருந்த பணத்தை மீண்டும் ஈராக்கிற்கு வழங்கப்போவதாக லெபனான் அறிவித்துள்ளது.

இந்த நிதி தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஈராக்கிய ஆளுனர் சபையின் அங்கத்தவர் அல் ருபாஸ் லெபனான் பிரதமமந்திரியுடன் நடத்தினார்.

பாக்தாத்தின் நிதி அமைச்சரும் மத்திய வங்கியின் ஆளுனரும் லெபனான் சென்று இந்த நிதியைப் பெற்றுக் கொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எவ்வளவு தொகை லெபனான் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியாத போதிலும் அமெரிக்க அதிகாரிகள் 500 மில்லியன் டொலர் வரை, வைப்புச் செய்யப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கின்றனர்.

# பிரச்சினைகளுக்கு வழியமைக்கும் சி.சு.க.–ஜே.வி.பி. கூட்டு!

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி., கூட்டு ஒப்பந்தம் கோழி முட்டை இட்டு கொக்கரிப்பதற்கு சமமாகும். இந்த கூட்டு ஒப்பந்தம் குறித்த முயற்சி கடந்த வருடம் ஆரம்பமானது. தற்பொழுது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம செயலாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஜே.வி.பி. செயலாளர் டில்வின் சில்வாவுக்கும் இடையில் பண்டார நாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது. இந்தக் கூட்டணிக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என பெயரிடப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் சிங்கள, முஸ்லிம், இந்து மதகுருமார்கள் கலந்து கொண்டனர். ஆனால் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த எவரும் இதில் கலந்துகொள்ளவில்லை. சில பத்திரிகைகள் இக் கூட்டணியைப் பற்றிநல்லதொரு அபிப்பிராயம் கொண்டிருக்கவில்லை. தமது கட்சி ஆதரவாளர்களை திருப்திப்படுத்தவும் ஐக்கிய தேசியக் கட்சியினரைப் பயமுறுத்துவதற்கும் அன்றைய முதல் கூட்டத்திலேயே மேடைப்பேச்சுக்கள் நிகழ்ந்தன. 20ஆம் திகதி கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின் ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச இலங்கை திரும்பியுள்ளார். ஆனால் 20ஆம் திகதி நடந்த கூட்டு ஒப்பந்த நிகழ்வில் அவர் கலந்துகொள்ளவில்லை. சனாதிபதி சந்திரிகாவும் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்துகொள்வதை நிறுத்திக் கொண்டார்.


சிலர் இக்கூட்டணி ஒப்பந்தம் எப்படி வெற்றிபெறும் என நினைத்தனர். சிலர் கொள்கை அடிப்படையில் இரண்டு கட்சிகளுக்கும் அதிகவேறுபாடுகள் உள்ளபடியால் கூட்டுச் சேர்வது இயலாத காரியம் எனக் கூறினர். இந்த இரு கட்சிகளும் எத்தனையோ முறைகள் பேச்சுவார்த்தைகள் நடத்தியும் கொள்கை அடிப்படையில் ஒத்து வராதபடியால் விலகிச் சென்ற எத்தனையோ சந்தர்ப்பங்களை நாம் காணக் கூடியதாக இருந்தது.

இதற்கு முக்கிய காரணம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் இனப்பிரச்சினையை அதிகாரப்பரவலாக்கல் மூலம் தீர்வுகாண முடியும் என்பதே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை பிரகடனத்தில் உள்ளது. ஆனால் ஜே.வி.பி.இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு கண்டால் நாட்டை பிரிப்பதற்கு சமம் எனக் கூறி வருகின்றது. இந்தப் பிரச்சினைகளுக்கு மத்தியில் தான் இம்மாதம் 20ஆம் திகதி கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த இரு கட்சிகளுக்குமிடையில் கொள்கை அளவில் மிக வேறுபாடுகள் இருக்கின்ற படியாலும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் எதிர்ப்புக்கள் இருக்கின்ற படியாலும் ஒரு தலைமையின் கீழ் சகல கட்சிகளும் ஒன்றிணைந்து ஒருதலைவரைத் தேர்ந்தெடுத்து ஒரு கட்சியின் கீழ் இயங்கினால் கொள்கை அடிப்படையில் மாற்றம் உண்டாகும். அப்படி இவர்கள் செயற்பட முடியாது. முரண்பாடுகள் ஏற்பட்டால் எல்லாக் கட்சிகளையும் கலைத்துவிட்டு விடுதலைப் புலிகளின் கட்சியில் சேர்வதே சிறந்த வழியாகும்.

பல வருடங்களாக ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்களைக்கொன்றுகுவித்து, கோடிக்கணக்கான தேசிய சொத்துக்களை அழித்து மேலும் தேசிய சொத்துக்களை அழிப்பதற்கும் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வில் கடும் போக்கை கடைப்பிடிக்கும் ஜே.வி.பி.யுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சேர்ந்து இயங்குவது மன்னிக்க முடியாத குற்றமாகும். இலங்கை அரசியலில் இம் மாதிரியான கூட்டுகள் பல இடதுசாரிக் கட்சிகளுடன் ஏற்பட்டு பின் தோல்வி அடைந்து பிளவுபட்டதை எவராலும் மறக்க முடியாது. பொதுத் தேர்தலில் ஒன்றிணைந்து வெற்றிபெற்றபின் இடதுசாரிக்கட்சிகளைத் தூக்கி எறிந்த சம்பவங்களும் உண்டு. சில கட்சியினரைப் பார்க்கும் பொழுது இவர்கள் இப்பூமியில் இருப்பதற்கே தகுதியற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் அன்புக்கணவர் விஜயகுமாரதுங்கவைப் படுகொலைசெய்தது சம்பந்தமாக ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்கவைக் கைதுசெய்து அவரை விசாரணைக்கு உட்படுத்துமாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன சனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். விஜயகுமாரதுங்க படுகொலை தொடர்பாக சோமவன்சவை விசாரிப்பதற்கு சட்டத்தில் இடம் உண்டா? இல்லையா? என்பது எமக்குத் தெரியாது. ஆனால் அரசியல் நாகரிகத்தின்படி அவரைக் கைதுசெய்து விசாரணை செய்வதுதான் சிறந்ததாகும்.

இதை நாங்கள் ஆராயும் பொழுது தமது நலன்களுக்காக எந்த அரசியல் வாதிகளும் கூட்டுச் சேர்வது புதிதல்ல. வல்லவனும் ஒருநாள் தடுமாறுவான் அவனும் மரண வலையில் வீழ்வான். இதைத் தடுக்க முடியாது.



1971ஆம் ஆண்டு ஜே.வி.பி. சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு எதிராக நடத்திய அரசியல் கிளர்ச்சியில் 20,000 இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள். அத்தருணத்தில் பிரதமராக இருந்த சிறிமா அம்மையாரை சோமவீர அமரவன்ச கடத்திச் செல்லவும் திட்டமிட்டிருந்ததும் 1980ஆம் ஆண்டு நடந்த இரண்டாவது ஜே.வி.பி.யின் கிளர்ச்சியின் போதும், விஜயகுமாரதுங்க படுகொலை செய்யப்பட்டதும், இவைகள் எல்லாவற்றையும் மறந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தற்பொழுது உருவாகி இருப்பது புதுமையானதொன்றல்ல. இப்படியான சம்பவங்கள் சரித்திரத்தில் அதிகமாக காணப்படுகின்றன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உதயமாகியதும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் தற்பொழுது உதயமாகி உள்ள புதிய முன்னணிக்கும் இடையில் மீண்டும் மலிக்-தித்த வெல ஆணைக்குழு பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது. ஐக்கிய சுதந் திரமுன்னணியின் உதயம் அரசாங்கத்தை கலைப்பதற்கேயாகும். தற்பொழுது மலிக்-தித்தவெல ஆரம்பிக்கும் பேச்சுவார்த்தைகள் ஐக்கிய தேசிய முன்னணி அரசைக்கலைத்து சனாதிபதியின் ஆட்சியின் கீழ் அரசை நடத்துவதற்கே ஆகும். மற்றும் பொதுசன ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி-லங்கா சமசமாஜ கட்சிகளுடன் தொடர்புகளை வைத்துள்ளது. இந்த இரண்டு கட்சிகளும் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணிக்கும் கடும் எதிர்ப்பானவர்கள் ஆனபடியால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி கூட்டு உப்பு சப்பில்லாத கதையாக இருக்கும். அரசியல் யாப்பின் படி 2007ம் ஆண்டு பொதுத்தேர்தலை நடத்தலாம். ஆனால் அதுவரை இந்தக் கூட்டு நிடிக்குமா. நீடிக்காது இப்பொழுது ஜே.வி.பி தலைவர்கள் பொதுத் தேர்தலை நடத்துமாறு சனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். தற்பொழுது பொதுத் தேர்தல் ஒன்று நடந்தால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியைக் கைப்பற்றும் என அநேகர் நம்புகின்றனர். ஆனால் வடக்குக் கிழக்கு மலையகத்தில் வாழும் மக்கள் இக்கூட்டணிக்கு கடும் எதிர்ப்பானவர்களாவார்கள். சனாதிபதி மூன்று அமைச்சுக்களையும் தன்வசம் எடுத்து இத்தருணத்தில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தினால் அது புதிய கூட்டணிக்குத் தோல்வியை உண்டு பண்ணும்.

ஆனால் சிலவேளை இத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியைக் கைப்பற்றினால் நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கும் பொருளாதார பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க நேரிடும். ஆனபடியால் யுத்தம் முழுமையாக நிறுத்தப்பட்டு இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது மிக அவசியமாகும். ஆனால் புதிய கூட்டு ஐந்து திட்டங்களை தற்பொழுது முன்வைத்துள்ளது. இந்த ஐந்து திட்டங்களும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவுமா என்பது சந்தேகம். விடுதலை புலிகளோடும் ஏனைய தமிழ் கட்சிகளோடும் பேச்சு வார்த்தைகள் நடத்தி பிரச்சினைகளுக்கு முடிவு காண்போம் என்று புதிய கூட்டணி கூறியுள்ளதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் புலிகளால் தற்பொழுது சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் தனி நாடு பிரிவதற்கு சமமாகும் என புதிய கூட்டணி தெரிவித்துள்ளது. ஆனால் இம்மாதம் 20 ஆம் திகதி நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப்புலிகளுடன் இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக கதைத்து முடிவுக்கு வரமுடியும் என முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கூறியுள்ளதற்கும் கூட்டணி அறிக்கைக்கும் இடையில் மிக வித்தியாசம் காணப்படுகின்றது. 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து தற்காலிகமாக விலகி இருப்பதும் பாதுகாப்பு அமைச்சு தமது அதிகாரத்துக்கு இல்லாதபடியால் தாம் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறி இருப்பதும், ஜே.வி.பி செயலாளர் டில்வின் சில்வா தாம் புதிய சமாதான ஒப்பந்தம் செய்யப் போவதாக கூறி இருப்பதும் மேலும் சில பிரச்சினையை உருவாக்கப்போகிறது.

புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதா இரண்டு வருட காலம் நடந்த சமாதானப் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதா, டோக்கியோ நிதி உதவிகளைப் பெறுவதா, வெளிநாட்டு நிதி உதவிகளை பெறுவதா, உலக வங்கியின் கடன் உதவிகளைப் பெறுவதா போன்றவைகளுக்கு புதிய கூட்டணி தலைவர் பதில் கூறுவது அவசியமாகும். □□□

எம்.எச்..எம் அஷூர் (லக்பிம)

மொழியாக்கம் :–சக்திவேல்

## பாடசாலை விளையாட்டு முகாமைத்துவம் வலைப்பந்தாட்ட பயிற்சிகள் ஆரம்பம்

தமிழீழ கல்விக்கழகத்துடன் இணைந்து தமிழீழ விளையாட்டத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "பாடசாலை விளையாட்டு முகாமைத்துவம்" "வலைபந்தாட்ட சிறப்புப் பயிற்சிகள்" எதிர்வரும் 5ஆம் திகதி தொடக்கம் கிளிநொச்சியில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள ஐந்து வலயங்களிலுமே நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள பாடசாலை விளையாட்டு முகாமைத்துவ இருநாட் பயிற்சி முதற்கட்டமாக கிளிநொச்சி வலயத்தில் 5ஆம், 6ஆம் திகதிகளில் நடைபெறும் 1ஏபி 1சி தரம்2 பாடசாலைகளின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள் இதிற் கலந்து கொள்வர் என அறிவிக்கப்படுகிறது. இதேபோன்று ஏனைய வலயங்களுக்கான நாட்கள் பின்னர் அறிவிக்கப்படும். சிறிலங்கா தேசிய வலைபந்தாட்ட பயிற்றுனர் திருமதி ரிஷாணயகார தலைமையிலான அணி ஒன்று 5ஆம் திகதி தொடக்கம் 4 நாட்களுக்கு கிளிநொச்சியில் பயிற்சிவழங்கவுள்ளது இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டதெரிவு அணிகளுக்கும், கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள கல்வி வலயங்களில் இருந்து ஒவ்வொரு கல்வி வலயத்துக்கும், 4 மத்தியஸ்தர் பயிற்சி பெறவிரும்புபவர்களும்,3 பயிற்றுனர் பயிற்சி பெற விரும்புபவர்களும் தேர்வு செய்யப்படவுள்ளனர். இவர்கள் குறைந்தது மாவட்ட மட்ட அணிகளில் பங்குபற்றியிருப்பது அவசியமாகிறது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆர்வமுடையவர்கள் வலயக்கல்விக்கழகப் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.(சோ)

–முல்லை. மக்கள் வங்கியில்–

## மீட்கப்படாத நகைகள் ஏலத்தில் விற்கப்படும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மக்கள் வங்கியில் 1984ஆம் ஆண்டுக்கு முன்பு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத நகைகள் எதிர்வரும் 30.04.2004க்குப் பின்னர் ஏலத்தில் விற்கப்படும் என முல்லைத்தீவு மக்கள் வங்கி முகாமையாளர் தெரிவித்தார்.

முதல் அளவு வட்டியைச் செலுத்தி நகைகளை மீட்கலாம் எனவும், ஏலத்தில் விற்கப்படும் நகைகளுக்கு வட்டிச்சலுகை இல்லையெனவும் வட்டிச்சலுகையுடன் நகைகள் மீள இறுதிச் சந்தர்ப்பம் எனவும் இக்காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளாத எந்த நகைகளுக்கும் மக்கள் வங்கி பொறுப்பானவர்கள் இல்லையெனவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (20)

# வறுமையில் வாழும் மாணவர் கல்வியைத் தொடர யாழ். தமிழ் மாணவர் ஒன்றியம் நடவடிக்கை

## முதற்கட்டமாக விபரம் திரட்டல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

**கல்வியைத் தொடர முடியாத நிலையில் வறுமைக்கோட்டின் கீழ் யாழ்.மாவட்டத்தில் வாழ்ந்து வரும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகளில் யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.**

கடந்த கால போரின் விளைவாக பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் ஏராளமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இதனால் இக்குடும்பங்களைச் சேர்ந்த கற்கும் வயதுடைய மாணவர்கள் பலர் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர். சிலர் கல்வியை இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு புனர்வாழ்வு மற்றும் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்கும் முயற்சிகளில் இத்தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் ஈடுபட்டுள்ளனர். இதற்குரிய முதற்கட்ட நடவடிக்கையாக யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகள் தோறும் கல்வியைத் தொடரமுடியாது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவ மாணவிகளின் விபரங்களை சேகரித்து வருவதுடன் வறுமையால் கல்வியை இடைநிறுத்தியோரின் விபரங்களையும் சேகரித்து வருகின்றனர். (33)

## பற்சிகிச்சை

வெளிநாட்டிலிருந்து வருகை தந்த பல்வைத்தியர் முருகா மற்றும் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரும் தியாக தீபம் திலீபன மருத்துவ நிலையம் ஆழியவளையில் கடந்த வியாழக்கிழமை அன்று 65பேரிற்குப் பற்சிகிச்சை வழங்கியுள்ளனர். இதில் பல் அடைத்தல், பல் பிடுங்குதல் என்பன இடம் பெற்றது.



பொருளாதார ஒத்துழைப்புத் தொடர்பான ஜப்பானிய உயர் மட்டத் தூதுக் குழுவினர் நேற்று முன்தினம் கிளி.மாவட்ட வைத்தியசாலையை பார்வையிடுவதைப் படத்தில் காண்க.
படம்: சோதி

# சமூக சீர்திருத்தத்தை மேம்படுத்த காவல்துறையினர் கலந்துரையாடல்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்தில் முள்ளியவளைப் பிரதேச காவல்துறையினர் தொடர்ச்சியாக வீதி ஒழுங்கு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

முள்ளியவளை பிரதான வீதிப் புனரமைப்பு மேற்கொண்ட பின்னர் தொடர்ச்சியாக ஏற்பட்டுவந்த சிறு சிறு வீதி விபத்துக்களை அவதானித்த பின்னர் மேற்படி வீதி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேளையில் வீதி விபத்துக்கள் தவிர்க்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

அதேவேளை மேற்படி பிரதேசத்தில் கிராமங்கள் தோறும் வீதி ஒழுங்கு குற்றத்தடுப்பு சட்ட நடவடிக்கை சமூக சீர்திருத்தம் போன்ற விடயங்கள் தொடர்பாக பொது அமைப்பு கிராம மக்களுடனும் கலந்துரையாடி விளக்கமளித்து வருவதுடன் மக்களின் பிரச்சினைகளும் உடனுக்குடன் கேட்டறிந்து தீர்வுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்படி வீதி ஒழுங்கு நடவடிக்கையினை முள்ளியவளை பிரதேச காவல்துறை பொறுப்பதிகாரி கஜேசமூர்த்தி நேரடியாக நெறிப்படுத்தி வருவதுடன் மக்களுடனான கருத்துப் பகிர்வினையும் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# - நயினை நாகபூசனி அம்மன் - ஆலயத்திற்கு நிதி சேகரித்த ஐவர் பொலிஸாரால் கைது !

(மட்டக்களப்பு)

நயினை நாகபூசணி அம்மன் ஆலயீத்திற்கான நிதி சேகரிப்பு என்று பெரும் தொகையான பணத்நை கொள்ளையிட்டு வந்த ஐவர் கொண்ட குழு வொன்றைப் பொதுமக்கள் பிடித்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

பகல்வேளையில் வேட்டி உடுத்து நெற்றியில் விபூதி குங்குமம் அணிந்து வீடுகளுக்கு சென்று விபூதிவழங்கி, கோவிலிற்கு நிதி சேகரிப்பதாக கூறியே இவர்கள் பணத்தைப் பெற்று வந்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரில் இக்குழுவைச் சேர்ந்த ஒருவர் மது போதையில் இருந்ததைக் கண்டதையடுத்தே பொதுமக்கள் இவர்களைப் பிடித்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

விசாரணைகளின்போது தாங்கள் பொதுமக்களிடம் கோயிலின் பெயரைச் சொல்லி ஏமாற்றி பணம் பறித்து வந்ததை ஒப்புக்கொண்டுள்ளனர் எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

# வரட்சியால் குருநாகலில் 90 வீத நெற்செய்கை பாதிப்பு

(கொழும்பு)

குருநாகல் மாவட்டத்தில் தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக 90 வீதமான நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக குருநாகல் மாவட்ட விவசாய சேவை உதவி ஆணையாளர் எம்.ஏ.பி.சி ஆலோசகர் கூறியுள்ளார்.

இம்மாவட்டத்தில் ஒரு இலட்சத்து எட்டு ஏக்கர் வயல் காணிகளில் இம்முறை 50 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றிலேயே வரட்சி காரணமாக 90 வீதமான நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

# மெட்டகொட தேவாலயம் எரிப்பு பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த திங்களன்று மெட்டகொட என்ற இடத்திலுள்ள வீடமைப்புத் திட்ட தேவாலயம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக காட்டுவ பொலிஸ் நிலைய பொறுப்பாளர் நவரட்ண பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இவர் பாதுகாப்புப் பணிகளை பலப்படுத்தி தாக்குதல்களை தடுக்க தவறியுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. வன்முறையாளர்கள் ஆலயக்கட்டடங்களையும் சிலைகளையும் இடித்து சேதமாக்கியுள்ளனர்.

இதனையடுத்து இப்பிரதேசத்திலுள்ள அனைத்து தேவாலயங்களுக்கும் போதுமான பாதுகாப்பளிக்குமாறும் மீண்டும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் பாதுகாக்கவும் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் பதிரன தெரிவித்துள்ளார்.

மேற்படி பொலிஸ் அதிகாரியின் இடத்துக்கு பிரேமசிறி என்பவர் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# பெப்.4ஐ துக்க தினமாக அனுஷ்டிக்க மன்னாரில் கோரிக்கை

(மன்னார்)

சிறிலங்காவில் சுதந்திரதினமான எதிர்வரும் நாலாம் திகதியை மன்னார் மாவட்ட மக்கள் அனைவரையும் கறுப்புக் கொடிகளைக் கட்டி துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு மன்னார் மாவட்ட பொதுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி ஒன்றியம் மகஜர் ஒன்றையும் வெளியிட்டுள்ளது. (மி)

# திருகோணமலையில் இருதமிழ்க் கிராமங்கள் சிங்கள குடியேற்ற பகுதியுடன் இணைக்க முயற்சி

(திருமலை)

திருகோணமலையில் உள்ள இரண்டு தமிழ்க் கிராமங்களை சிங்கள உதவி அரச அதிபர் பிரிவிற்குள் கொண்டு செல்வதற்கான முயற்சியில் சிறிலங்கா அரசு ஈடுபட்டுள்ளது.

மூதூர் அரச அதிபர் பிரிவில் உள்ள உப்பாறு, சீனன்வெளி ஆகிய கிராமங்களையே சேருவில சிங்கள உதவி அரச அதிபர் பணிமனையுடன் இணைப்பதற்கான முயற்சியை சிறிலங்கா அரசு மேற்கொண்டுவருகிறது.

இதுகுறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் கண்டனம் தெரிவித்துள்ளார். திருகோணமலை மாவட்டத்தின் மேற்படி சேருவில சிங்கள உதவி அரச அதிபர் பிரிவு பாரம்பரிய தமிழ்க் கிராமங்களை ஆக்கிரமித்து சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டமையால் வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# பணம் அறவிடப்பட்டும் பரீட்சை நடை பெறவில்லை !

## வாகன சாரதிகள் கவலை

(முல்லை)

முல்லை. மாவட்டத்திற்காக நடமாடும் சேவை மூலம் கிளி நொச்சியில் வைத்து ஓட்டுனர் அனுமதிப்புத்தகம்(லைசன்ஸ்) வழங்குவதற்கான பரீட்சை நடாத்துவதற்கு பணம் அறவிடப்பட்டும் இன்னமும் அதற்கான பரீட்சை நடைபெறவில்லை.

சுமார் 100 பேருக்கு மேல் ஒருவருக்கு 600 ருபா வீதம் பணம் அறவிடப்பட்டது. ஆனால் இதுவரை பரீட்சை தொடர்பான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென வாகன ஓட்டுனர்கள் கவலை தெரிவித்தனர். (20)

# நாட்டின் ஐந்து வருட காலப்பகுதியில் 2இலட்சத்து 50 ஆயிரம் வீதி விபத்துக்கள்!

(கொழும்பு)

நாட்டில் கடந்த ஐந்து வருடங்களில் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் வீதி விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் வாகனப் போக்கு வரத்துப் பிரிவு அதிகாரி கூறியுள்ளார்.

நாட்டில் 10 விநாடிகளுக்கொரு விபத்து இடம் பெறுகிறது. 2002இல் 2029 பாரிய விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. இதில் 2160பேர் மரணமடைந்துள்ளனர்.

நாளொன்றிற்கு ஆறுபேர் விபத்துக்களினால் மரணமாகின்றனர். நாலு மணித்தியாலங்களுக்கு ஒருவர் விபத்துக் காரணமாக மரணமாவதாக அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

90வீதமான வீதிவிபத்துக்களுக்கு சாரதிகளே காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.



தூயவன் அரசறிவியற் கல்லூரி மாணவர்கள் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை மற்றும் அதன் வளாகத்தில் சிரமதானப் பணியில் ஈடுபடுவதைப் படத்தில் காண்க.
படம். லோகிசன்

## வீதிகள் திருத்தப்படுமா?

முல்லைத்தீவு செல்வபுரம் வீதி சிலாவத்தை மாதிரிக்கிராமம் வீதி ஆகிய இரண்டுமே மக்கள் போக்குவரத்துக்கான வீதிகள். இதனாலேயே பேருந்துகளும் செல்கின்றன.

ஆனால் ஏனைய வீதிகள் திருத்தப்படும் போதும் இதுவரை அதற்கான முயற்சிகள் எதுவும் எடுக்கப்படாத நிலையில் இவ்வீதிகள் காணப்படுகின்றன.

இவ்வீதிகளூடாக போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்ளுகின்றமை குறிப்பிடத்தக்கது. (20)

# நன்னீர் மீன்பிடி அபிவிருத்திக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் நொறாட் போரூட் நிறுவன நிதியுதவியுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தினால் அக்கராயன் குள கிராமிய நன்னீர் மீனவர் கூட்டுறவுச் சங்க பயனாளிகளுக்கான மீன்பிடி உபகரணங்கள் கையளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத் தலைவர் ச.கிருஸ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்றது

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் கலந்துகொண்டு மீனவர்களுக்கான மீன் பிடிபடகையும், உபகரணங்களையும் கையளித்தார்

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது. தொடர்ந்து தேசியக்கொடியினை அக்கராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் முடியரசன் ஏற்றி வைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக கொடி போரூட் நிறுவனக் கொடி அக்கராயன் அபிவிருத்தி நிறுவனக் கொடிகள் தொடர்ந்து ஏற்றப்பட்டன.

அடுத்து மீன்பிடி உபகரணங்களையும், படகுகளையும் அரச அதிபர் இராசநாயகம் மற்றும் போரூட் நிறுவன திட்ட முகாமையாளர் எஸ்.செங்கை நாதன், யு.என். எச்.சி. ஆர் திட்ட இணைப்பாளர் கே.கமல நாதன் ஆகியோர் வழங்கினார். இதன் மூலமாக 10 பயனாளிகள் நன்மையடைந்துள்ளனர் இரண்டு இலட்சத்து அறுபத்து ஏழாயிரத்து அறுநூறு ரூபா பெறுமதியான 5 குல்லாக்கான் 50 பீஸ் வலைகள், மற்றும் ஏனைய மீன்பிடி உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மீனவர் குடும்பங்கள், பொதுமக்கள், கிராம சேவை அலுவலர்கள், அரசியல்த்துறையினர், நீர்ப்பாசனத் திணைக்களத்தினர்கள் தேசிய எழுச்சிப் பேரவையினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, நீரியல்வள விரிவாக்க அலுவலர் எஸ்.சுதாகரனின் ஒழுங்குபடுத்தலில் ஏற்கனவே அக்கராயன் குளத்தில் மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. அத்தோடு பயனாளிகளுக்கும் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றன. (சோ)

# குளங்களைப் புனரமைக்க உலகவங்கி நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் குளங்கள் மற்றும் தடுப்பு அணைகளைப் புனரமைக்க உலக வங்கி எட்டுக் கோடியை வழங்கியுள்ளது.

நியாப் திட்டத்தின் கீழ் 40குளங்களையும்,40 தடுப்பு அணைகளையும் புனரமைக்க இந்த உதவியை உலக வங்கிவழங்கியுள்ளது. இந்த நிதியுதவியில் 12 பொதுக் கட்டடங்களை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என செயலக அதிகாரி கூறியுள்ளார்.

# நடப்பு செயற்பாடுகள் குறித்து மக்களுடன் கலந்துரையாடல்

கிளிநொச்சி பிரதேச இரத்தினபுரம் கிராம தேசிய எழுச்சி பேரவையினரின் ஏற்பாட்டில் கிராமச் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வியாழக்கிழமை நடைபெற்றது.

மாலை 5.00 மணிக்கு இரத்தினபுரம் முன்பள்ளியில் இரத்தினபுர தேசிய எழுச்சி பேரவை செயலாளர் யோகராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கருத்துரைகளை கிராம உத்தியோகஸ்தர் காண்டீபன், கிளிநொச்சி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் த.நிருபன்,கிளி/நகர் வலயப் பொறுப்பாளர் திருமாறன் ஆகியோர் வழங்கினர்.




## சிந்தனைக்கு



உண்மையில் எமது மக்களின் பாரிய உயிரிழப்பிற்கும் அவர்களின் உடைமை நாசத்திற்கும், சிங்கள ஆளும் வர்க்கத்தின் இனவெறிபிடித்த தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 02-02-2004


## சகோதரனின் 'நற்சான்றிதழ்'

"சனாதிபதி உரிய நேரத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுத் தேர்தலை நடத்துவார். எதிர்வரும் வெசாக் தினத்துக்கு முன்னர் எமது முன்னணி ஆட்சியில் அமரும்" என ஆரூடம் தெரிவிக்கின்றார் பண்டாரநாயக்க குடும்பத்தின் இளவலும் சனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர்களில் ஒருவருமான அனுராபண்டாரநாயக்க.

ஐ.தே. முன்னணி அரசாங்கம் கவிழ்க்கப்படுவதோ அன்றி கலைக்கப்படுவதோ ஒன்றும் எதிர்பார்க்கப்படாததொன்றல்ல. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதற்கான பொருத்தமானதொரு சூழ்நிலைக்கு/ சந்தர்ப்பத்திற்கு காத்துக்கொண்டிருக்கின்றார் என்பதே உண்மை. சனாதிபதி சந்திரிகா பாராளுமன்றத்தைக் கலைக்க மாட்டேன் எனக்கூறுவதை நம்புவதற்கு எவரும் காதில் பூச்சுற்றியவர்கள் அல்ல.

இதனை அனுராபண்டாரநாயக்கவும் கூட ஊர்ஜிதம் செய்பவராகவே உள்ளார். "சனாதிபதி சரியான நேரத்தில் பாராளுமன்றத்தைக் கலைப்பார். பாராளுமன்றத்தைக் கலைக்க மாட்டேன் என்று சனாதிபதி தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் கூறியிருப்பதை நான் நம்பமாட்டேன்" என அவர் தனது சகோதரியின் நம்பகத் தன்மைக்கு ஒரு சான்றிதழும் வழங்கியுள்ளார்.

அடுத்த வெசாக் தினத்துக்கு முன்பாக ஆட்சியில் அமர்வோம் என அனுரா பண்டாரநாயக்க கூறியிருப்பதை எம்மால் ஊர்ஜிதம் செய்ய முடியாது போனாலும், நாடாளுமன்றத்தைக் கலைக்க மாட்டேன் என்ற சனாதிபதியின் 'கூற்றை நான் நம்பமாட்டேன் என்ற அவரின் கூற்றுக்களில் சந்தேகம் கொள்ள எதுவும் இல்லை. இது தனியாக சனாதிபதி சந்திரிகாவின் குணநல்னை அடிப்படையாகக் கொண்ட முடிவாக அல்லாமல், தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை மாற்றத்தின் விளைவு என்று கூடக்கூறலாம்.

சுதந்திரக்கட்சிக்கும்– ஜே.வி.பி.க்கும் இடையிலான கூட்டணி விவகாரத்தில் தாம் இயன்றளவு விலகியிருப்பது போன்றதொரு தோற்றப்பாட்டை ஏற்படுத்துவது போன்றதாகவே சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகள் உள்ளன. சுதந்திரக் கட்சி – ஜே.வி.பி. கூட்டணி உடன்பாடு கைச்சாத்தாகும் நிகழ்வில் இருந்து, ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவை சந்திக்க மறுத்தது வரையில் சனாதிபதியின் நடவடிக்கைகள் இத்தகையவையாகவே உள்ளன.

இவ்வாறுநடந்து கொள்வதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. குறிப்பாக ஜே.வி.பி.யின் நிலைப்பாடானது மேற்குலக நாடுகளுக்கெதிரானதாகவும்– அவர்களுக்கு விரும்பத்தகாததாகவும் இருக்கையில் ஜே.வி.பி.யுடனான உறவில் காட்டப்படும் நெருக்கமானது தம்மீதான அழுத்தங்களை அதிகரிப்பதற்கு வாய்ப்பு ஏற்படலாம் என அவர் கருதக்கூடும். இதன் காரணமாக ஜே.வி.பி. யுடனான கூட்டை பெருவிருப்புடன் தான் வரவேற்பதாக இல்லை என அவர் காட்டிக்கொள்ள முற்படக்கூடும்.

ஆனால், சனாதிபதியின் இத்தகைய நடவடிக்கையினால் ஜே.வி.பியை தொலைவில் வைத்துக்கொள்ள அவர் விரும்புவதாக எவரும் அர்த்தம் கொண்டு விடப்போவதில்லை. சனாதிபதியின் சம்மதமோ ஆசீர்வாதமோ இல்லாமல் சு.கட்சி – ஜே.வி.பி. கூட்டணி ஏற்பட்டதாக நம்புவதற்கு ஏனையவர்கள் அரசியலில் கற்றுக்குட்டிகளும் அல்ல.

இது ஒருபுறம் இருக்க, சு. கட்சி – ஜே.வி.பி கூட்டணி உருவாவதற்கு அடிப்படையாக அமைந்த விடயமே ஆட்சிக் கவிழ்ப்பு அன்றி பொதுத்தேர்தல் என்பதே ஆகும். இதில் இருந்து சுதந்திரக்கட்சியோ அன்றி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ பின்வாங்குதல் என்பது சாத்தியப்பாடானதொன்றாக இருக்க மாட்டாது. ஆகையினால், பொதுத்தேர்தல் என்பது விரைவில் எதிர்பார்க்கப்பட்டதொன்றாகவே உள்ளது.

இந்நிலையில் தற்பொழுது அனுரா பண்டாரநாயக்க வெசாக் தினத்துக்கு முன்பாக – மே மாதத்திற்கு முன்– ஆட்சிபீடம் ஏறுவோம் எனக் குறிப்பிட்டுள்ளமையானது ஏப்ரல் மாதத்தில் பொதுத் தேர்தலுக்கான வாய்ப்பு உண்டு என்ற மதிப்பீட்டுக்கு அடிப்படையாகக் கொள்ளத்தக்கதாகும். அனுரா பண்டாரநாயக்கவின் தகவல்களை வைத்து தீர்மானம் ஒன்றுக்கு வருதல் ஆரோக்கியமானதாக இருக்க மாட்டாது எனினும், அறிவுகரமான செயற்பாடு என்ற ரீதியில் அவரது தகவல் சரியானதாகிவிடக்கூடும்.

ஆனால் ஒன்று, அனுரா பண்டாரநாயக்க கூறியிருப்பது போன்று வெசாக் தினத்துக்கு முன்பாக ஆட்சி மாற்றம் செய்யும் நோக்கில் தேர்தல் ஒன்று நடத்தப்படுமானால் அதில் நிச்சயமாக சு.கட்சி–ஜே.வி.பி. கூட்டணிதான் வெற்றி பெறும் என்பதற்கில்லை. அதிலும் அனுரா பண்டாரநாயக்க சார்ந்திருக்கும் அணி தேர்தலில் வென்று ஆட்சி அமைக்குமானால் அது ஒரு வரலாற்று முரணாகவே அமைந்து விடக்கூடியதொன்றாகும்.

எது எவ்வாறாகிலும் இவ்வாண்டு தேர்தல் ஆண்டாக அமையும் என சு.கட்சி – ஜே.வி.பி. கூட்டணி அமைக்கப்படும் முன்னரே எதிர்வு கூறப்பட்டதுதான். இந்நிலையில், அனுரா கூறியது போன்று தம்மால் பாராளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என சனாதிபதி கூறியது நம்பக்கூடியது ஒன்றல்லத்தான். மாறாக யாராவது சனாதிபதியின் கூற்றுக்களில் நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பின் சனாதிபதி சந்திரிகாவின் குணநலன் புரியாதவர்களாகவே அவர்கள் இருக்க முடியும்.

# பொதுத் தேர்தலை விரைவில் எதிர்பார்த்தே சுதந்திரக்கட்சியுடன் கூட்டணி அமைத்தோம்

### -ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க

(கொழும்பு)

ஜே.வி.பி. சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணியமைத்தது விரைவில் பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்பார்த்தே என ஜே.வி.பி. தலைவர் சோமவன்சஅமரசிங்க லக்பிம பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாட்டை ஐ.தே. முன்னணியால் மேலும் நிர்வகிப்பது என்பது முடியாத ஒன்று எனவும் விரைவில் அதனை நீக்குவதன் அவசியத்தாலும் மக்கள் அதனையே விரும்புவதாலும் தமது கட்சி கூட்டிணைந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்துமாறு சனாதிபதியைக் கேட்டீர்களா என்று கேட்டதற்கு, அதற்கு அவசியமிருக்கவில்லை எனவும் சனாதிபதி அந்தக்கருத்தில் கூட்டணியமைக்க முன்வந்திருக்கிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கூட்டணி அரசமைத்தால் யுத்த நிறுத்தத்தின் கீழ் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் என்றும் அவர் மேற்படி பத்திரிகையிடம் தெரிவித்துள்ளார்.

# முப்படைகளுக்கும் அதிநவீன ஆயுதங்கள் சனாதிபதி நடவடிக்கைக்கு பணிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவில் முப்படைகளுக்கும் அதிநவீன ஆயுதங்களைப் பெற்றுக்கொடுக்க பாதுகாப்புக்குப் பொறுப்பான வகையில் சந்திரிகா நடவடிக்கைஎடுத்துள்ளார் என சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக முப்படைகளினதும் தளபதிகளின் சிபார்சுகள் பாதுகாப்புச் செயலர் மூலம் சனாதிபதியிடம் வழங்கப் பட்டுள்ளன.

இதன்படி நவீன தொழில் நுட்பத்திறன் கொண்ட றொக்கட்டுக்கள், ஏவுகணைகள், பீரங்கிகள், உலங்கு வானூர்திகள் என்பன கொள்வனவு செய்யப்படவுள்ளன. இதற்கான கேள்விப்பத்திரங்களை விரைவில் கோருமாறு பாதுகாப்புத் துறைச் செயலாளருக்கு சனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் பெப்ரவரி முதல் திகதியிலிருந்து குறைப்பு

### -அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தகவல்

(கொழும்பு)

குழந்தைப் பால்மா,தண்ணீர் போன்றவற்றுக்கு வற்வரி அறவிடுவது முற்றாக நீக்கப்படுகின்றது. சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக் கப்பட்டுள்ளதுடன்அரிசி, பாண், அரிசிமா, கோதுமைமா, மரக்கறி,பழங்கள், மீன்,முட்டை, தேங்காய்,மருந்துப் பொருட்கள், சுகா தாரசேவைகள், ரயில், பஸ், கட்டணங்கள், மண்ணெய்,புத்தகங்கள்,பெற் றோல், டீசலுக்கான மசகு எண்ணெய் போன்றவை வற்வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நிதியமைச்சர் கே.என். சொக்ஸி கூறியுள்ளார். அத்துடன் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்கவும்,வற்வரி,சுங்கவரி, இறக்குமதிவரி போன்றவற்றை முடிவு செய்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை துணிவகை கள், பாதணிகள், சவர்க்காரம், பற்பசை, தீப்பெட்டி, நுளம்புச்சுருள்கள், தொலைபேசிக்கட்டணங்கள் ஆகியவற்றுக்கான வற்வரி 20வீதத்திலிருந்து 15 வீதமாகக் குறைக் கப்பட்டுள்ளது. 400கிராம் முழு ஆடைப்பால்மாபக்கற் ஒன்றின் சில்லறை விலை ஐந்து ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுஇதற் கான சுங்கவரியும் குறைக்கப்பட்டுள்ளது.

பருப்பு கிலோ மூன்று ரூபாவாலும்,ரின்மீன் வற்வரி குறைப்புடன் 425கிராம்ரின் இரண்டுரூபா ஐம்பது சதத்தாலும் இறக்குமதி செத்தல் மிளகாய் சுங்கவரி குறைப்புடன் கிலோ 12ரூபா வாலும், பெரியவெங்காயம் கிலோ ஆறுரூபாவாலும், உருளைக்கிழங்கு சுங்கவரிகுறைப்புடன் கிலோ இரண்டு ரூபாவாலும் குறைக்கப்பட் டுள்ளன, மின்சாரக்கட்டணம் 40 அலகு கள் வரை வற்வரி அறவிடப்படமாட்டாது. வீட்டுப் பாவனையில் 400 அலகுகள் வரை சேவைக் கட்டணம் அற விடப்படமாட்டாது வர்த்தகப் பாவனையில் 1000 அலகுகளுக்கு மேல் சேவைக் கட்டணம் அறவிடப்படும் என்று நிதி யமைச்சர் கூறியுள்ளார்.இந்த நடைமுறை பெப்ரவரி முதலாம் திகதி முதல் அமுலபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# ரயில்வே அதிகார சபைப் பிரகடனத்தை அரசாங்கம் வாபஸ்பெற வேண்டும்

### புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் வலியுறுத்து

அரசு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடு ரயில்வே அதிகாரசபைப் பிரகடனத்தை வாபஸ் பெற வேண்டும். இது மக்களின் அசௌகரியங்களுக்கு உடனடிப் பரிகாரமாகவும் அமையும்.

இவ்வாறு புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன அறைகூவல் விடுத்துள்ளார்.

அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு நல்க நாம் தயார். அதேவேளை அரசு தொழிலாளர் மீது அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்துவிட முனையக்கூடாது அப்படிக் கட்டவிழ்க்குமேயானால் எங்களால் பேசாமடந்தைகளாகவும் இருக்க முடியாது.

ரயில்வே சங்க ஊழியர்களும், சுகாதார சேவை ஊழியர்களும் வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். இவற்றிற்கு ஜே.வி.பி.யினர் சூத்திரதாரிகள் அல்லர். நாமே பின்னணி வகிக்கின்றோம் என்றும் கூறிய அவர்,

ரயில்வே அதிகாரசபையை நிறுவ வேண்டாம் என்கின்றோம். எமது கோரிக்கை எடுபடவில்லை. அரசாங்க மருத்துவர்களின் சம்பளத்தை அதிகரித்த அரசு ஏனைய சுகாதார சேவையினரைக் கைவிட்டு விட்டது.

இது ஒரு பாராபட்சமான நடவடிக்கை. இவற்றைக்கண்டு எம்மால் பாராமுகமாக இருக்க முடியாது. தொழிற்சங்க நடவடிக்கைகளில் எமது இடதுசாரி தொழிற்சங்கங்களே முக்கியபங்கு வகிக்கின்றன என்றார்.

# அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் ஆடவர் பட்டத்தை ரோடர்பெரடர் வென்றார்

அவுஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவுச் சம்பியன்பட்டத்தை சுவிஸ்லாந்து வீரர் ரோடர் பெரடர் பெற்றுக் கொண்டுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் ஆட்டத்தின் இறுதி ஆட்டத்தில் நடப்புவிம்பிள்டன் சம்பியனை சுவிஸ்லாந்தின் ரோடர் பெரடர் ரஷ்யாவின் மாரஸ் பதியினை 7:6, 6:4, 6:2 எனும் செட் கணக்கில் வென்றுள்ளார். கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பையஸ் இணை தோல்வியடைந்துள்ளது.

இந்தியாவின் லியாண்டர் பையஸ் அமெரிக்காவின் நவரத்திலோவா இணை பெல்ஜியத்தின் ரீனா ஜிமோஜிட் ரஷ்யாவின் எலினாபோவினா இணையிடம் 1:6, 6:7 எனும் நேர்செட் கணக்கில் தோல்வியடைந்துள்ளது.

# அவுஸ்திரேலியாவுக்கு மீண்டும் வெற்றி

நேற்று பேர்த்தில் நடைபெற்ற வி.பி கிண்ண முக்கோண ஒருநாள் கிரிக்கெட் தொடரின் 11 வது லீக் போட்டியில் அவுஸ்திரேலிய அணி இந்தியாவை 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்றுள்ளது. இத்தொடரில் அவ்வணி பெற்ற 7 ஆவது வெற்றி இதுவாகும்.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆஸி. அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாது திணறியது எனினும் 49 ஆவது ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையுமிழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது.

கங்குலி, லக்ஸ்மன் ஆகிய இருவரும் தலா ஒரு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். செவாக் 42, கார்த்திக் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களையும் யுவராஜ் சிங் 47 ஓட்டங்களையும் பெற ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்ட மிழந்தனர்.

பின்னர் 204 என்ற ஓட்ட இலக்குடன் ஆட்டத்தை தொடங்கிய அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் மூன்று பேர் விரைவில் ஆட்டமிழந்தாலும் 4வது விக்கெட் ஜோடி 122 ஓட்டங்களை இணையோட்டமாகப் பெற்று அணியின் வெற்றிக்கு அத்திவாரமிட்டனர். அடம்கில்கிறிஸ்ட்டும் அன்ரு சைமனும் முறையே 75, 72 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்திய அணி சார்பில் அகர்காரும், பதானும் தலா இருவிக்கெட்டுக்களையும், பாலாஜி ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர். அவுஸ்திரேலியா இந்தியாவுடனான 4 போட்டிகளில் 3ல் வெற்றி பெற்றுள்ளது. இப்போட்டியில் ஆட்டநாயகனாகக்கில்கிறிஸ்ட் அறிவிக்கப்பட்டார்.

இவ்விரு அணிகளுக்கிடையிலான முதலாவது இறுதியாட்டம் எதிர்வரும் வெள்ளியன்று மெல்போனில் நடைபெறும்.

# மதீனாவில் சனநெரிசலில் சிக்கி 250 யாத்திரிகர்கள் பலி; பலர் காயம்

சவூதிஅரேபியாவின் மெக்காவுக்கு அருகே மதீனாவில் ஏற்பட்ட மக்கள் நெரிசலில் இரண்டு இந்தியர்கள் உட்பட 250 யாத்திரிகள் உயிழுந்துள்ளனர். காயமுற்றவர்களின் சரியான விபரம் தெரியவில்லை என சவூதிஅரேபியாவின் உள்துறை அமைச்சரகம் தெரிவித்துள்ளது.

சாத்தானை உருவகப்படுத்தும் ஒரு தூணின் மேல் கல் எற்றுவதற்காக செல்லும் வழியில் உள்ள பாலத்திலேயே இந்த விபத்து நேர்ந்தது என்றும் சம்பவத்தின் போது அப் பாலத்தில் சுமார் இருபது லட்சம் பேர் குழுமியிருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தவிபத்தில் காயமடைந் தவர்களின் எண்ணிக்கை பற்றி உறுதியாகக் கூறமுடியவில்லை என்றாலும் சுமார் 244 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பது இன்னமும் உறுதியாக அடையாளம் காணப்படவில்லை என்று சவூதிஅரேபியாவின் சமய விவகாரத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.



மதீனாவில் ஏற்பட்ட சனநெரிசலில் சிக்கிக் கொண்டோரை மீட்கும் பணி நடைபெறுகிறது.

### -தற்கொலைக் குண்டுத் தாக்குதலில்-

# குர்திஸ் உதவிப் பிரதமர் உட்பட 57 பேர் பலி; 235 பேர் காயம்

அமெரிக்க இராணுவம் சார்பான குர்திஸ் கட்சியினருக்கு எதிராக நேற்று நடாத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் குர்திஸ் அரசாங்கத்தின் உதவிப் பிரதமர் இரு அமைச்சர்கள் உட்பட 57பேர் கொல்லப்பட்டதுடன் 235பேர் காயமடைந்தனர். இறந்தோர் தொகை 100ஐத் தாண்டியுள்ளதாக குர்திஸ் அமைச்சர் ஒருவர் கூறினார். 57 பேர் கொல்லப்பட்டதுடன் இறந்தோர் தொகை உயரலாமென குர்திஸ் உத்தியோக வட்டாரங்கள் கூறின. நகரத்திலுள்ள 3 வைத்தியசாலைகளில் காயப்பட்டோர்அனுமதிக்கப் பட்டுள்ளதாக வைத்திய வட்டாரங்கள் கூறின.

பாக்தாத்திலிருந்து வடக்கே 320km தொலைவிலுள்ள குர்திஸ் நகரத்தில் இச் சம்பவம் நடைபெற்றது. இறந்தோரில் உதவிப் பிரதமர் நபி அப்துல் ரகுமான் அமைச்சர்களான அல்பட் வீக்யாடிற், சாட் அப்துல்லா ஆகியோர் அடங்குகின்றனர்.

# சார்க் அங்கத்துவ நாடுகளுக்கு தனி நாணயத்திற்கான முயற்சி

(கொழும்பு)

'சார்க்' அங்கத்துவ நாடுகளுக்கு தனி ஒரு நாணய முறையை அறிமுகம்செய்ய தான் திட்டமிட்டுவருவதாக சார்க் கைத்தொழில் சம்மேளனத்தின் புதிய தலைவர் மைக்கல் காசிம் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் ஊடகவியலாளர்களுக்கு அவர் இந்தத் தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தின் வர்த்தக சமூகத்தினர் கட்டுப்பாடு இன்றி அங்கத்துவ நாடுகளுக்கு சென்று வருவதற்கு ஏற்பாடு செய்வது எமது நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சு.கட்சி, ஜே.வி.பி. கூட்டணியில் 4 கட்சிகள் இணைவு!

(கொழும்பு)

சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. கூட்டணி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன், பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் மேலும் நான்கு கட்சிகள் இணையவுள்ளன. நாளைய தினம் இது தொடர்பான நிகழ்வு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, மக்கள் கட்சி மற்றும் தேச விடுதலை கட்சி என்பனவே புதிய முன்னணியில் இணையவிருக்கும் கட்சிகளாகும்.

மக்கள் விடுதலை முன்னணியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கடந்த 20ஆம் திகதி இந்த கூட்டு முன்னணியை அமைத் திருந்தமை குறிப்பிடத் தக்கது.(32)

# 24 மணி நேரத்திற்குள் நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

நாட்டின் பிரச்சினைகளை 24 மணித்தியாலத்துக்குள் தீர்த்து வைக்க முடியாது என்றும் அவற்றுக்குப்பரிகாரம் காண காலம் எடுக்கும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் ஒன்று நடத்தப்படுமாயின் தமது கட்சி மக்களின் மற்றுமொரு ஆணையைப் பெறும் எனத் தெரிவித்த பிரதமர், தற்போதைய அரசியல் நெருக்கடி காரணமாக பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

பொருளாதாரச் சீர்குலைவுக்கு தமது அரசாங்கம் இடமளிக்காது என மீண்டும் வலியுறுத்திக் கூறிய விக்கிரமசிங்க இது தொடர்பான பரிகார நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

# விலைவாசி உயர்வைக் கண்டித்து ஜே. வி. பி. மறியல் போராட்டம்

பொருட்களின் விலை உயர்வைக் கண்டித்து மக்கள் விடுதலை முன்னணி நாளைய தினம் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

கொழும்பு கோட்டை தொடருந்து மையத்துக்கு முன்னால் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் இடதுசாரி தொழிற்சங்கமும் பெண்கள் அமைப்பும் இதனை ஒழுங்கு செய்துள்ளன. (32)

# திருமலைபாலத்தடிச் சேனையில் பால் சேகரிப்பு நிலையம்!

### -கால்நடைஅமைச்சு-யு.என்.டி.பி. உடன்பாடு

(திருகோணமலை)

மூதூர்,ஈச்சிலம்பற்று மற்றும் சேருவில பிரதேச செயலர் பிரிவுகளில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் மக்களின் வாழ்க்கைத்தர அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு பாலத்தடிச்சேனை என்னும் இடத்தில் பால்சேகரிப்பு நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான உடன்பாடு ஒன்று கைச்சாத்து இடப்பட்டுள்ளது. யு.என்.டி.பி.(ஐ.நா.அபிவிருத்தித் திட்டம்) அமைப்பும் விவசாயக் கால்நடை அமைச்சும் இந்த உடன்படிக்கையை செய்துள்ளன. விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சின் சார்பில் திருகோணமலை அரசஅதிபர் காமினி ரொட்ரிகோவும் யு.என்.டி.பி.யின் சார்பில் அதன் திருமலைப்பிரதிநிதி ஆன் ஹெராசத்தும் திருமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் உடண்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட நிகழ்வில் மில்கோ அமைப்பின் கிழக்குப் பிராந்திய முகாமையாளர் கே. கனகராஜா கலந்து கொண்டார். மில்கோ நிறுவனம் விவசாய மற்றும் கால்நடை அமைச்சின் கீழ் வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (25)

### — திருமலை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் —

# கசிப்பு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்; புலிகள் பொலிஸ் அதிகாரியிடம் தெரிவிப்பு!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அதிகரித்துவரும் கசிப்புத் தொல்லையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் போராளிகளும் ஈடுபடுவர் என்று விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை அலுவலகத்தில்கடந்த வெள்ளிக்கிழமை திருமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிபர் திரு. உபாலி ஹேவகேயுடன் நடந்த பேச்சுவார்த்தையின்போது தெரிவித்தார். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை தலைவர் கேர்ட் ஸ்பேர் தலைமையில் இப்பேச்சுவார்த்தை நடந்தது.

திருமலை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் இனங்களுக்கு இடையே சுமுக உறவைப் பேணுவது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இப்பேச்சுவார்த்தையின்போது ஆராயப்பட்டதாக கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன. இப்பேச்சுவார்த்தை பற்றி விடுதலைப்புலிகள் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் கருத்து வெளியிடுகையில், அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் கசிப்பு வியாபாரம் அதிகரித்து வருவதாகவும், இதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் புலிகளின் அரசியல் போர்ராளிகள் ஈடுபடுவர் என்றும் தாம் சிரேஷ்ட பொலிஸ் அதிபரிடம் தெரிவித்ததாகக் கூறினார். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உயிர் மரங்களை வெட்டி மர வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் எவராக இருப்பினும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த வகையிலேதான் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மாட்டு வண்டிகளுடன் வந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தாம் பொலிஸ் அதிபரிடம் தெரிவித்ததாக திலக் கூறினார். (25)

### தேர்தல்..

என ஏழு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

செயற்குழு கூட்டம் நேற்று கொழும்பில் உள்ள அதன் தலைமைக்காரியாலயத்தில் கட்சியின் தலைவர் வீ. ஆனந்த சங்கரி தலைமையில் நடைபெற்றது.

கடந்த டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தில் ஆனந்த சங்கரிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து கூட்டம் குழப்பத்தில் முடிவடைந்தது. இதனையடுத்து கட்சிக்குள் ஏற்பட்ட உள் முரண்பாடுகளால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு கூட்ட விவகாரம் நீதிமன்றம் வரை சென்றிருந்தது. ஆனாலும் கட்சி முக்கியஸ்தர்கள் சிலர் மேற்கொண்ட சமரச முயற்சி காரணமாக மத்திய செயற்குழு கூட்டம் மீண்டும் நேற்று கட்சித் தலைவரின் தலைமையில் கூடியது. இக்கூட்டத்தில் செயலாளர் சம்பந்தன், சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம், என். ரவிராஜ், மாவை சேனாதிராஜா, அரியநாயகம் சந்திரநேரு உட்பட 26 மத்திய செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டம் மிகவும் சுமுகமாக நடைபெற்றதாகவும், எந்தவொரு பிரச்சினையும் ஏற்படவில்லையென வும் சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார். (32)

### பனையுடன்..

(வயது42, 3ஆம் கட்டை ஊரியான் கண்டாவளை) என்பவர் படுகாயமடைந்த நிலையில் தருமபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். உயிரிழந்தவரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக கிளி.மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (லோ)

### சங்கீதப்...

கப்பட்டது. பரிசில்களை தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன், முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் மாவட்ட மகளிர் பொறுப்பாளர் தமிழ்நிலவு ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். நிகழ்வில் சிறப்புரையினை அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன் நிகழ்த்தினார்.

கல்லூரி அதிபர் கண்ணதாசன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வின் இறுதியில் தமிழீழத்தின் தலை சிறந்த பாடகர்களும் கல்லூரி மாணவர்களும் இணைந்து நடத்திய இசை நிகழ்ச்சி உட்பட பல கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. (லோ)

### இன்று...

சபைகளுக்கான அமைச்சர் அலிக் அனுவிஹார வெளியிட்டுள்ளார்.

ஹஜ் பெருநாளை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை விடுமுறைதினம் அறிவிக்கப்பட்டிருந்ததால் அதனை இன்றைய தினம் அமுல் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

### நோர்வே..

ஒரு விசேட செயற்திட்டத்துடன் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளோம். இரண்டு வருட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்பும்கூட வடக்கு-கிழக்கிலுள்ள மக்களின் வாழ்வு இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை. இதனை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்றார்.

ரொம்சோ பல்கலைக்கழகமும் ரொம்சோவிலுள்ள கல்லூரிகளும் 56 இலட்சம் குரோனர்களை வெளிவிவகார அமைச்சிடம் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்துடன் நட்புறவை அதிகரிப்பதற்காகக் கோரியுள்ளன. அங்கு மருத்துவ பீடம் ஒன்றை உருவாக்குவதே நோக்கமாகும். இதற்கு சாதகமான சமிக்கைகள் கிடைத்துள்ளதாக எம்.ஜோஸ் தெரிவித்தார்.

### தமிழர்..

ளது.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில்; சிறிலங்காவின் சுதந்திரதினத்தைக் கரிநாளாக அனுஷ்டிக்க ஒன்று திரளுமாறு யாழ் மாவட்ட மக்களைக் கேட்டுள்ளது.

கிளி மாவட்ட வர்த்தக சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வர்த்தக நிலையங்கள் முன்பாக கறுப்புக்கொடிகளைக் கட்டியும், பணியாளர்கள் கறுப்புப்பட்டி அணிந்து தங்கள் துக்கத்தைத் தெரிவிக்குமாறும் கேட்டுள்ளது.

வவுனியா வடக்கு வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில், அனைத்து இடங்களிலும் கறுப்புக்கொடிகளை கட்டுவதுடன் அனைவரும் கறுப்புப் பட்டிகளை அணிந்து உணர்வுகளை வெளிப்படுத்துவதுடன் ஏ-9 வீதியை அன்றைய தினம் வழிமறித்து எதிர்ப்பினைக் காட்டுவதுடன், வாகன உரிமையாளர்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கி போக்குவரத்தை நிறுத்திக்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

### சமாதான..

ளார். போர்நிறுத்த உடன்பாட்டை சனாதிபதி மதிக்கிறார். ஆயினும் அதற்காக திரை மறைவில் எந்தவித தொடர்புகளையும் அவர் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் கொண்டிருக்கவில்லை. இந்த நிலையில் பிரதம மந்திரி தொடர்ந்தும் சமாதான முன்னெடுப்பை முன்கொண்டு செல்லவேண்டும் என்பதே சனாதிபதியின் விருப்பமாகும் எனவும் ஹரிம்பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.